விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 262 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 21 வியாழக்கிழமை (07.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான காணொலியை நீக்கியது சனல் 4

(கொழும்பு)

ஈஸ்டர் குண்டுவெடிப்புகள் தொடர்பான அதிர்ச்சிப் பின்னணித் தகவல்களுடன் வெளியிட்ட சர்ச்சைக்குரிய வீடியோவை ஒளிபரப்பிய இங்கிலாந்தின் சனல் 4, அந்த வீடியோக்களை இணையத்தில் இருந்து அகற்றியுள்ளது.

இணையதளம் மற்றும் சமூக வலைத்தளங்களிலிருந்தும் குறித்த வீடியோவை சனல் 4 நீக்கியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலுக்கு ராஜபக்ஷவினரே பிரதான சூத்திரதாரியாக 11




### இங்கிலாந்தின் சனல் 4க்கு

## ராஜபக்ஷவினர் மீது வரலாற்றுப் பகை

### நாமல் எம்.பி

(கொழும்பு)

ராஜபக்ஷக்களுடன் சனல் 4 இற்கு 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததில் இருந்து வர 11



## சனல் 4 காணொலி விசாரணை அவசியம்

### கர்தினால் வலியுறுத்து



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் Channel 4 தொலைக்காட்சி நேற்று முன்தினம் வெளியிட்ட காணொலியில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர் 11

# லசந்தவை உடன் கொல்ல வேண்டும்

## கோட்டா கட்டளையிட்டதாக சனல் 4 அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவை உடனடியாக கொல்ல வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி கோட்டா பிள்ளையானிடம் கட்டளையிட்டதாக சனல் 4 அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளது.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி குறித்த பல்வேறு அதிர்ச்சிகர தகவல்களை வெளிப்படுத்திய சனல் 4 தொலைக்காட்சியின் முழுமையான ஆவணப்படம் வெளியாகியுள்ளது.

Sri Lanka's Easter Bombings: Dispatches என்ற பெயரில் இந்த ஆவணப்படம் வெளியாகியுள்ளது.

பிள்ளையானின் தனிப்பட்ட மொழிபெயர்ப் 04

### நாட்டு மக்கள் அனைவரும்

## கட்டாயம் பார்க்க வேண்டிய காணொலி

### சனல் 4 தொடர்பாக லசந்த மகள்



(கொழும்பு)

சனல் 4 வெளியிட்டுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான காணொலியை அனைத்து இலங்கை 11

## சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஐ.நா ஆணையாளர்

(ஜெனிவா)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் 11



## குண்டுத் தாக்குதலுக்கும் எனக்கும் தொடர்பு இல்லை

### சனல் 4 காணொலியை மறுத்த பிள்ளையான்

(கொழும்பு)

ஈஸ்டர்குண்டுத் தாக்குதலுக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 04

## ஒட்டுசுட்டானில் விபத்து; இரு இளைஞர்கள் பலி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இரு இளை 11



## முல்லை மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் ஆரம்பம்

### புலனாய்வாளர்கள் நடமாட்டமும் தாராளம்

(முல்லைத்தீவு)

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகள், முல்லைத்தீவு 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை

# பொன்விழா அழைப்பு




இடம் : பாடசாலை பொது அரங்கு
காலம் : 09.09.2023 சனிக்கிழமை
நேரம் : மு.ப 9.00

பொன்விழா மலர் வெளியீடும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புரிமையுடன் அழைத்து நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்

(C-7200)

## Romania வேலைவாய்ப்பு விசா

Romania நாட்டில் Electrician மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7204)

**021 222 1265, 076 250 0098**

## முகாமையாளர் தேவை

முறிகண்டி A9 வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்துமாமன்ற வன்னி அலுவலகத்தை நிர்வகிப்பதற்கு முகாமையாளர் தேவை. அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

**அகில இலங்கை இந்துமாமன்றம்**
**211/17, கோயில் வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

(16966)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு **076 636 3378, 076 097 3127**

## விற்பனைக்கு

29 சிறி XXXX இலக்க ஜேணி ரக மினி பஸ் விற்பனைக்கு உண்டு. (C-7205)

**076 526 6717**

## நாகபூஷணி திருமண சேவை

MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA

கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும். (C-7188)

**264, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

*அன்புடையீர்!*

கடந்த 08.08.2023 அன்று செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் கந்தசாமி அன்னம்மா



மண்மகிழ 18.07.1944 விண் நெகிழ 08.08.2023

உணர்வோடு கலந்திட்ட எம்முயிர்த்தாயே
உம் பிரிவால் வாடுகின்றோம் உறவுகளும்
பிள்ளைகளும் அன்பு பண்பு அறிவு திறன்
இவையனைத்துக்கும் நீரே அம்மா எமக்கு
இவ்வுலகின் முதல் தாயே அம்மா வேராக
இருந்து விழுதுகளை உய்வித்தீர் இன்று
விழுதுகள் மட்டும் வேரிழந்து நிற்கிறதே
அம்மா இனி எங்கள் வாழ்வுதனில் ஏழேழு
தலைமுறைக்கும் நீங்கள்தான் குலதெய்வம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 07.09.2023 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மதியம் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தோப்பு, அச்சுவேலி. தகவல்: குடும்பத்தினர் 076 994 8679 (16890)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டணத்தை 32 வீதத்தால் அதிகரிக்கத் திட்டம்

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் யோசனை சமர்ப்பிப்பு

**(கொழும்பு)**

**மின்சாரக் கட்டணத்தை மேலும் 32 வீதத்தால் அதிகரிப்பதற்கான யோசனையை இலங்கை மின்சாரசபை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.**

இது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் மூலமாக தெரியப்படுத்தியுள்ளார்.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஐம்பத்து நான்கு பில்லியன் ரூபாவை பெற்றுக் கொள்வதற்காகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் உத்தேச கட்டண உயர்வு மேற்கொள்ளப்பட்டால், ஒரு வருடத்திற்குள் கட்டணங்கள் 200% இற்கும் அதிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மின்சார பாவனையாளர் சங்கத்தின் தேசிய செயலாளர் சஞ்சீவ தம்மிக்க குறிப்பிட்டுள்ளார்.

கடும் வறட்சி காரணமாக நீர் மின் உற்பத்தி குறைந்துள்ளதால் 3500 மெகா வாட் மின்சார உற்பத்தி கடும் நெருக்கடியை சந்திக்கலாம் என்பதால் மின்சார அலகு ஒன்றிற்கு அறவிடப்படும் 42 ரூபா தொகை 56 ரூபாவாக அதிகரிக்கப்படுமென மதிப்பிடப் பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த பிரேரணைக்கு அனுமதி வழங்க வேண்டாம் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் கோருவதாக அதன் தேசிய செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் மீண்டும் இந்த ஆண்டு மின் கட்டணத்தை உயர்த்த முன்மொழிந்துள்ளது. ஆண்டுக்கு இருமுறை மின் கட்டணம் உயர்த்தப்படும் என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

மூன்றாவது முறையாக அதிகரிக்க முயற்சித்தும் அது தோல்வியில் முடிந்தது. இந்த ஆண்டு நான்காவது முறையாக மின் கட்டணத்தை உயர்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது சட்டத்திற்கு எதிரானது. மின் கட்டணம் உயர்த்தப்பட்டால், இந்த ஆண்டு மின் கட்டணம் 200% அதிகரிக்கும் என தெரிவித்துள்ளார். (நி-5)

## சீனி விலை அதிகரிப்பு?

(கொழும்பு)

இலங்கையில் சீனி விலை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் சீனியின் விலை கடந்த ஆறு ஆண்டுகளில் என்றும் இல்லாதவாறு கடுமையாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு மெற்றிக் தொன் சீனியின் விலை 3 வீதத்தினால் அதிகரித்து தற்போது 37,760 இந்திய ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 15 நாட்களுக்குள் இந்த விலை அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் கரும்பு விளைச்சல் அதிகமுள்ள பிரதேசங்களில் பருவ மழை குறைவடைந்துள்ளமை, இருப்பு குறைவு காரணமாக சீனி விலை அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலைமையானது, பணவீக்கத்தை அதிகரித்துள்ளதுடன், சீனி ஏற்றுமதிக்கு தடை விதிப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் சீனி ஏற்றுமதியை இந்தியா தடை செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே, சர்வதேச சந்தையில் சீனி விலை கடந்த 11 ஆண்டுகளில் இல்லாத வகையில் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பின்னணியில், இலங்கையிலும் சீனி விலை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5)


# மரண அறிவித்தல்

## இராசேந்திரம் - நிக்சன்

**அதிபர் மு. கல்விளான் குளம் மகா வித்தியாலயம்**
**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 09.10.1975 | 04.09.2023 |



மல்லாவி யோகபுரம் மேற்கு வளநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் நிக்சன் அவர்கள் (04.09.2023) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இராசேந்திரம் புவனேஸ்வரியின் அன்பு மகனும் துரைச்சாமி- பரமேஸ்வரியின் அருமை மருமகனும் அபிராமியின் அன்புக் கணவரும் வனிதா,றொபின்சன்(ஐயன்குளம் மகா வித்தியாலயம்) காலஞ்சென்ற ஹள்சன் மற்றும் யமுனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவரட்ணம் (அதிபர்-கொந்தக்காரன்குளம் அ.த.க பாடசாலை), கோமதி, சசிதரன், கல்யாணி, திருமாலினி ஆகியோரின் மைத்துனரும் கேதீஸ்வரன், சந்திரகுமார் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் கிறிஸ்ரீனா, தர்சிகா, வைஷ்ணவன் கிருத்திகா, லக்ஸ்வின், அகிரா ஆகியோரின் பெரியப்பாவும் யனுசா, சகானன்,றெசானா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.09.2023 இன்று நவாலியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் கிரியைகள் காலை 6 மணிக்கு நடைபெற்று அன்னார் கடமையாற்றிய மு/கல்விளான்குளம் மகா வித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பூதவுடல் மல்லாவி யோகபுரம் மேற்கு வளநகரில் அமைந்துள்ள அன்னாரின் பிறப்பிடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.


தொடர்புகளுக்கு
077 673 8335 (16960)

தகவல்
மனைவி-அபிராமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் 14 ஆவது விளையாட்டு விழா

## துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமானது



வடமாகாணத்தின்14 ஆவது விளையாட்டு விழா வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

வடமாகாணத்தில் உள்ள 651 பாடசாலைகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் கோட்ட மட்ட மற்றும் வலய மட்ட வெற்றிகளின் பின்னர் மாகாண விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 13 கல்வி வலயங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 5000 விளையாட்டு வீரர்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளதாக மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

120 விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும் 14 ஆவது வடமாகாண விளையாட்டுப் போட்டிகள் நேற்று



ஆரம்பமாகியுள்ள நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அத்துடன் இவ்வருட விளையாட்டு விழாவில் 8 புதிய விளையாட்டு நிகழ்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

மாகாண விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னர் இவ்வருடம் இடம்பெற்ற வலய மட்ட விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பதக்கங்கள் மற்றும் வெற்றிச்சின்னங்களை வடமாகாண ஆளுநர் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, கல்வி அதிகாரிகள், விளையாட்டு அதிகாரிகள் உட்பட விருந்தினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (6-33-104)

# ஆப்கானிஸ்தான் அணியை வெற்றி கொண்ட இலங்கை

ஆசிய தொடரின் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் இலங்கை - ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற இலங்கை அணி பட்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி முதலில் ஆடிய இலங்கை அணி 291 ரன்கள் எடுத்தது.

இதனையடுத்து களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி 37.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வி அடைந்தது.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி வரலாற்று சாதனையை பதிவு செய்துள்ளது. அதாவது ஒருநாள் போட்டியில் தொடர்ச்சியாக 12 போட்டிகளில் வெற்றி பெற்று பாகிஸ்தான் மற்றும் தென்னாப்பிரிக்கா அணியின் சாதனையை சமன் செய்துள்ளது.

தென்னாபிரிக்கா அணி இதனை இருமுறை செய்துள்ளது. பாகிஸ்தான் ஒரு முறை மட்டுமே இந்த சாதனையை படைத்துள்ளது. இலங்கை அணி முதன் முறையாக இந்த சாதனையை பதிவு செய்துள்ளது. இந்த பட்டியலில் அவுஸ்திரேலியா தொடர்ச்சியாக 21 ஒருநாள் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் இடத்தில் உள்ளது. இலங்கை அணி நாளை மறுதினம் 9 ஆம் திகதி வங்கதேசம் அணியை எதிர்கொள்கிறது. (6)




## லசந்தவை...

பாளராக செயற்பட தொடங்கி, அந்த அமைப்பின் முக்கியஸ்தராக மாறியிருந்த ஆசாத் மௌலானா தற்போது நாட்டிலிருந்து வெளியேறி சுவிற்சர்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ளார். அவர் இதில் பல தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

இதில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தவிர்ந்த, வேறு பல கொலைகளையும் வெளிச்சமிட்டுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த பின்னர் பிள்ளையான் குழுவாக இயங்கிய குழு, எப்படி இராணுவக் கூலிப்படையாக இயங்கியது என்பதற்கான பல்வேறு தகவல்களை ஆசாத் மௌலானா வெளிப்படுத்தியுள்ளார்.

பிள்ளையானின் மொழிபெயர்ப்பாளராக செயற்பட்ட ஆசாத் மௌலானா, அந்த குழுவின் உள்ளக விவகாரங்களை முழுமையாக அறிந்தவர். பிள்ளையான் உள்ளிட்ட துணைப் படை உறுப்பினர்களுக்கு ஆங்கிலம், சிங்களம் தெரியாத காரணத்தினால், அரச, இராணுவ, உளவுத்துறை உயர்மட்டத்தினர் வழங்கும் கட்டளைகளை ஆசாத் மௌலானாவே மொழி பெயர்த்து, அந்த குழுவினருக்கு தெரிவித்து வந்துள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலையின் பின்னணி பற்றிய தகவல்களையும் சனல் 4 வெளிப்படுத்தியுள்ளது.

இதில் ஆசாத் மௌலானா தகவல் வெளியிடுகையில்,

திரிபோலி படைப்பிரிவு என்று அழைக்கப்படும் ஒரு துணை இராணுவ மரணப் படைக்கு உங்களிடமுள்ள சிறந்த ஆட்களை தந்து உதவுமாறு கோட்டாபய கேட்டதால், பிள்ளையான் தனது ஆட்களை திரிபோலி படைப்பிரிவில் வேலை செய்ய வைத்தார். அந்த பிரிவு கோட்டாபயவின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கியது. அரசாங்கத்திற்கு எதிரானவர்களை அவர்கள் தெரிவு செய்து கொன்றார்கள்.

பிள்ளையானையும் என்னையும் கோட்டாபய சந்திப்பிற்கு அழைத்தார். கோட்டாபயவை அவரது அறையில் சந்தித்தோம். அவருக்கு முன்னால் சண்டே லீடர் பேப்பர் இருந்தது. அவர் 'இந்த பல்லா (நாய்) எப்பொழுதும் என்னுடன் விளையாடுகிறது' என்றார். மேலும் லசந்த கொல்லப்பட வேண்டும் என்கிறார். உங்களால் முடிந்தால், உடனடியாகச் செய்யலாம் என்றார். கூடிய விரைவில் செய்யச் சொன்னார்"

மிக் விமான கொள்வனவில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் லசந்த விக்கிரமதுங்க செய்திகளை வெளியிட்டமை கோட்டாபய ராஜபக்ஷவை கடும் சீற்றத்திற்குள்ளாக்கியது என ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

மேலும்,

கோட்டாபய ஜனாதிபதியானதும் நாட்டை விட்டு தப்பிச் சென்ற குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணை அதிகாரியான நிசாந்த சில்வாவும் இந்த ஆவணப்படத்தில் தோன்றியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ, இராணுவ, கடற்படை புலனாய்வாளர்களால் தனக்கும் தனது குடும்பத்துக்கும் உயிரச்சுறுத்தல் ஏற்பட்டதால் நாட்டை விட்டு தப்பிச் சென்றதாக குறிப்பிட்டார்.

அத்துடன், லசந்த விக்கிரமதுங்க கொலையில், திரிபோலி பிளாட்டூனின் 5 பேருக்கு தொடர்புள்ளதை கண்டறிந்தேன். தொலைபேசி பகுப்பாய்வின் வழியாக அது கண்டறியப்பட்டது. அவர்கள் லசந்தவின் போக்குவரத்து பாதையை அவதானித்து கொலை செய்திருந்தனர். திரிபோலி பிளாட்டூன் கோட்டாபயவின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கியது. அதனால் அந்த விசாரணைக்கு கோட்டாபயவுக்கு அழைப்பாணை விடுத்தேன்.

லசந்த கொலை வழக்கில் எனது பெயரை சந்தேகநபராக ஏன் பெயரிட்டாய் என கோட்டாபய கேட்டார்.

தேவையானதை மட்டும் செய்யுங்கள். தேவையில்லாததை விட்டு விடுங்கள். நீங்கள் யார் என்பதை நான் கவனிக்க மாட்டேன் என்றேன். கோட்டாபய என்னுடன் மகிழ்ச்சியாக இருக்கவில்லை என நிசாந்த சில்வா தெரிவித்தார். (ம-7.9)

## குண்டுத்...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கும் குண்டுதாரிகளுக்கும் தனக்குமிடையில் எந்த தொடர்பும் இல்லை வெளிநாட்டில் புகலிடம் கோருவதற்காக தனது முன்னாள் பேச்சாளர் பொய்களை கூறியதாக இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் தெரிவித்தார்.

தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக தனது குடும்பத்துடன் இலங்கையிலிருந்து வெளியேறுவதாக அசாத் மௌலானா் ஒரு வருடத்திற்கு முன்னர் தமது கட்சிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்ததாக தெரிவித்தார்.

கடந்த காலங்களிலும் சனல் 4 தனது காணொலிகள் மூலம் இலங்கைக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் பிள்ளையான், அண்மையில் வெளியிடப்பட்ட ஆவணப் படம் தொடர்பில் தாம் அச்சப்படத் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்களுடன் தொடர்புள்ள மத, அரசியல் மற்றும் சமூக சக்திகளை பாதுகாக்க அசாத் மௌலானா முயற்சிப்பதாக தனக்கு சந்தேகம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் கிழக்கில் தமது கட்சியின் இருப்பை அழிக்க சில தரப்பினரின் முயற்சியாகக் கருதப்படலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் பிள்ளையான், சனல் 4 காணொலியில் வெளிப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மாத்திரமன்றி, அசாத் மௌலானாவின் கூற்றுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு சர்வதேச உதவியை கோரியுள்ளார்.

இவ்வாறான வீடியோக்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் இலங்கையில் மீண்டும் ஒரு உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தும் என்று அவர் எச்சரித்தார். (ம-7.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால்

# 63,156 விவசாயிகள் பாதிப்பு

## விவசாய அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

**சீரற்ற காலநிலை காரணமாக 63,156 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.**

விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெற்செய்கையில் ஈடுபடும் 62,754 பேரும் ஏனைய பயிர்ச்செய்கையில் ஈடுபடும் 402 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

குருணாகலை மற்றும் உடவலவ ஆகிய பகுதிகளிலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

கடன் மறுசீரமைப்பால்

## ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது

### ஜனாதிபதி உறுதி



(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் எதிர்வரும் வாரத்தில் நிறைவு செய்ய வேண்டும்.

நிறைவு செய்யாவிட்டால் அனைத்து நடவடிக்கைகளும் பாதிக்கப்படும். நாட்டை மற்றவர்கள் பொறுப்பேற்க தயங்கிய நேரத்தில் நான் பொறுப்பேற்று நாட்டைக்கட்டியெழுப்பியுள்ளேன்.

மேலும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. 9 வீதத்தை நிச்சயமாக தருவதாக நாங்கள் உறுதியளித்துள்ளோம்.

அந்த 9 வீதத்தையும் நான் தெரிவு செய்யவில்லை. கடந்த ஆட்சியில் தான் அதுவும் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே அது பற்றி என்னிடம் பேச வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

### தயாசிறி ஜயசேகர பதவியிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டுள்ளார்.

அதற்கமைய அவரின் பதவிக்கு சரத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சுதந்திரக்கட்சியின் 72 ஆவது தேசிய மாநாடு அண்மையில் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

### சி.ஐ.டிக்கு செல்கிறார் பிள்ளையான்

(கொழும்பு)

"சனல்-4 வெளியிட்ட செய்திகளில் எவ்விதமான உண்மையும் இல்லை" என இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துறை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சனல்-4 வெளியிட்ட செய்தி தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் அவர் முறையிடவுள்ளதாக தெரிவித்தார். (நி-5)




## கருணைக் கடவுளே

நல்லூர் பதிதனிலே மனை கொண்ட கந்தனே
அருள் பாலிக்கும் கருணைக் கடவுளே
கோடான கோடி பக்தர்களுக்கு
கருணை மழை பொழியும் அற்புதமானவரே

இனமத பேதங்களை களைந்து
உன்பாதம் ஓடிவரும் தென்னக பக்தரை
அரவணைத்து அருள்பாலிக்கின்றாயே
உந்தன் நாமத்தை சொல்ல ஆயிரம் பக்தர்கள்

கருணை கொண்ட கொடுக்கும் கந்தனே
அனைத்தையும் காக்கும் காவல் தெய்வமே
உன் அன்பை நாடிவரும் இனவாதிகளின்
மனங்களை மாற்ற அருள் புரிவாயே

எஸ்.பி.தனா,
தெல்லிப்பழை.

## நல்லூரான் புகழ் பாடுவோம்

நல்லையம் பதியிலே உறைந்திருக்கும் முருகா!
நல்லை நகர் பெருமை கொள்ளும் உந்தனால் முருகா!
நற்றமிழால் உன் நாமம் ஒலித்திடும் முருகா!
நாற்றிசையும் உன் புகழ் மணக்கும் முருகா!
வேல்கொண்டு வினை தீர்க்கும் பழனி முருகா!
வேண்டும் வரம் தந்தருள்வாய் மஞ்ஞை முருகா!
நல்லடியார்கள் உனைக் காண என்றும் முருகா!
நல்ல பல வண்ணமாய் அசைந்து உலா வரும் முருகா!
நாடி வரும் பக்தர்களிடம் பக்திப் பிரவாகம் முருகா!
நாளெல்லம் உன்னடியில் சரண் புகுந்த சக்தி முருகா!
கலியுக வரதனாய் வந்துதித்த திரு முருகா!
கலிகாலத் துன்பங்களிலிருந்து காத்திட வேண்டுமையா
நல்லூர் முருகா!

பிறேமா தியா,
யாழ்ப்பாணம்.

# இராசிபலன்

07.09.2023
ஆவணி 21, வியாழக்கிழமை
அட்டமி முன்னிரவு 9.09 மணிவரை

ரோகினி பிற்பகல் 3.57 மணிவரை
சுபநேரம் -7.34-9.04 மணிவரை
இராகுகாலம்-1.34-3.04 மணிவரை

சந்திராஷ்டமம்-
சுவாதி, விசாகம்.

வளவன்


மேஷம்

துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.


கடகம்

பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிஷ்டகரமான நாள், கௌரவமான நாள்.


துலாம்

குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.


மகரம்

மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.


ரிஷபம்

திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பல நாட்களாக பார்க்காமலிருந்த உறவினர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.


சிம்மம்

செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


விருச்சிகம்

இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும்.


கும்பம்

தாய்வழி ஆதரவு பெருகும், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


மிதுனம்

பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.


கன்னி

பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.


தனுசு

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வருங்காலத்தைப் பற்றிய சிந்தனை மேலோங்கும், உடல் நலன் சீராகும், சுவாரஸ்யமான நாள்.


மீனம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

கடந்து போன நேரம் ஒருபோதும் திரும்பி வருவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுவாபிமானி' தேசிய விருது வழங்கலில் யாழ்.மாவட்டம் மூன்றாம் இடம்

(யாழ்ப்பாணம்)

சுவாபிமானி தேசிய விருதுகளின் சிறந்த பிரதேச மட்ட உத்தியோகத்தர்களுக்கான விருது-2022 இல் யாழ்ப்பாண மாவட்டம் மூன்றாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் சமூக சேவைகள் திணைக்களத்தினால் கடந்த 2023.08.03 ஆம் திகதி அன்று களுத்துறை மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற "சுவாபிமானி" தேசிய விருதுகள் வழங்கும் நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் சிறந்த பிரதேச மட்ட உத்தியோகத்தருக்கான போட்டியில் நல்லூர் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தரான திருமதி. ரஜீவன் தர்மினி பங்குபற்றி மூன்றாம் இடத்தினைப் பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். (நி-6)

# தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு சிகிச்சை உபகரணங்கள்



(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் இலங்கை இந்திய வர்த்தக சங்கத்தின் நிதியுதவியில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மின் அதிர்வு சிகிச்சை உபகரணம் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது

ஒரு கோடி பெறுமதியான மின் அதிர்வு சிகிச்சை உபகரணம் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டது

இதன்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர்.எம்.எம்.றெமான்ஸ் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் உளநல வைத்திய நிபுணர் பேராசிரியர் மருத்துவர்.எஸ்.சிவயோகன், பிரான்ஸ் இலங்கை இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவர் இராசையா சிறீதரன், உறுப்பினர்கள், வைத்தியசாலையின் வைத்தியர்கள் அதிகாரிகள் பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-5-6-33-104)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வு இன்று 7 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் பாட்டு-ஸ்ரீ காந்தா சாருஜன், வீணை-உ.குமுதா, மிருதங்கம் -, க. இசைநிலவன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் இசை அரங்கில் பாட்டு-பரமேஸ்வரி கணேசன், வயலின்-இ.நிரோஜன், மிருதங்கம்- ஞா.வசந், கஞ்சிரா-மு.சுலக்சன், முகர்சிங்-நி.மோகனதர்சன் ஆகியோர் இசைக்கவுள்ளனர்.

• • • • • • • • • •

யாழ். இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசை அரங்கு நாளை 8 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் நல்லூர் சோமராகம் இசை மன்றத்தினால் குழு இசை நடத்தப்படவுள்ளது.இதன் போது வயலின்-ஸ்ரீ சாருஜன்,மிருதங்கம்-க.இசைநிலவன், நெறியாள்கை-குமுதா உமாகாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு இடம் பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-சியாமளாங்கி கருணாகரன், வயலின்-சு.சுவர்ணாங்கி, மிருதங்கம்-ம.லோகேந்திரன், கஞ்சிரா-சிவ.எசக்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.(நி-5-6)

# வடக்கு மக்களின் அபிவிருத்திக்கு ஐக்கிய நாடுகள் துணை நிற்கும்

## ஐ.நா வதிவிட பிரதிநிதி யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடமாகாண மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு தொடர்ந்தும் பூரண ஆதரவை வழங்கும் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை வதிவிட இணைப்பாளர் மார்க் அன்றூ பிரான்ச் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்று மாலை ஆளுநர் அலுவலகத்தில் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தின் சமூக, பொருளாதார மற்றும் நல்வாழ்வு தொடர்பில் திருப்திகரமான போக்கு காணப்படுவதாகவும் எதிர்காலத்தில் இந்த செயற்பாடுகளின் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதே ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கமாகும் என தெரிவித்தார்.

மேலும் ஆளுநர் வடமாகாணத்தின் தற்போதைய நிகழ்வுகள் குறித்து அவருக்கு விளக்கமளித்ததுடன், முப்பது வருட கால யுத்தத்தினால் பாதிப்புக்கு உள்ளாகி வாழ்ந்த வடபகுதி மக்கள் தற்போது சாதகமான நிலைமையை அடைந்து வருவதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல உள்ளிட்ட குழுவினரும் கலந்து கொண்டனர். (நி-6-33)

### புலோலி கிழக்கு மனோன்மணி அம்பாள் ஆலய பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் அருள் மிகு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய பாலஸ்தாபன கும்பா பிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.14 தொடக்கம் 10.26 வரையிலான சுப முகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது. (நி)



யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாணவர்களின் புத்தாக்கத் திறனை வெளிப்படுத்தும் கண்காட்சி இடம்பெற்றது.

### சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

(சாவகச்சேரி)

எழுத்தாளர் மிருசுவில் தமிழ்த்தாசனின் "பண்பாடுகள் படும்பாடுகள்" என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு சாவகச்சேரி வடக்கு திருப்புகழ் மண்டபத்தில் சாவகச்சேரி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி-6-30)

### குழந்தையை கடத்திய நபரொருவர் கைது

(சாவகச்சேரி)

தனது முதல் மனைவியின் இரண்டு வயதுக் குழந்தையைக் கடத்திக் கொண்டு வேறொரு 19 வயதுப் பெண்ணுடன் தலைமறைவான மீசாலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கைது செய்துள்ளனர்.

முதல் மனைவி பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டிற்கு அமைவாக குறித்த நபர்கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (நி-6-30)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 180 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 600 | 500 | 600 |
| தக்காளி | 160 | 130 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 160 | 140 | 180 | 250 |
| கரட் | 350 | 300 | 350 | 350 |
| பூசணி | 60 | 100 | 80 | 80 |
| புடோல் | 80 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 200 | 240 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 220 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 80 | 120 | 60 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 160 | 200 |
| பயற்றங்காய் | 150 | 150 | 100 | 120 |
| லீக்ஸ் | 160 | 180 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 120 | 120 | 150 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 200 | 150 |
| போஞ்சி | 450 | 300 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 150 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 50 | 120 |
| தேசிக்காய் | 700 | 700 | 500 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 350 | 350 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 60 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 50 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 30 | 80 |
| ஈரப்பலா | 100 | 70 | 100 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன், கஜிந்தன்)

## ஊரெழு கணேச வித்தியாலய பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஊரெழு கணேச வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)



தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பாலஸ்தாபனக்கிரியைகள் நேற்று சிறப்புற இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# 5 லட்சம் பெறுமதியான குளியலறை உபகரணங்கள் திருட்டு

## இருவர் கைது

(மன்னார்)

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டல் ஒன்றின் குளியல் அறைகளில் இருந்து திருடப்பட்ட ஒரு தொகுதி உபகரணங்களுடன் இரண்டு சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான குளியல் அறை உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் தாழ்வுபாடு மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 58 வயதுடையவர்கள் என மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குளியல் அறை உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் கடந்த திங்கட்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

குறித்த முறைப்பாட்டிற்கு அமைவாக கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு சந்தேகநபர்கள் இருவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் விசாரணைகளின் பின் இரு சந்தேகநபர்களும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த உள்ளதாக மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் அண்மைக் காலமாக இவ்வாறான பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-6-285)

# கடல் வளத்தினை பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு



(முறிகண்டி)

"கடல் வளங்களை பேண்தகு முறையில் பாதுகாத்தல்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு செயற்றிட்டமும் பயிற்சி செயலமர்வும் நேற்று மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் பூநகரி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

சர்வதேச கடற்கரையோர சுத்திகரிப்பு வாரத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நிகழ்வில் கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, தேசிய உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களால் விழிப்புணர்வு பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச சபை செயலாளர் தயாபரன், மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் மற்றும் ஊழியர்கள், பூநகரி கடற்றொழிற் சங்க சமாசத் தலைவர் ஜோசப் பிரான்சிஸ், கடல் றொழிற் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி-6-100)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

**சேர். பொன். இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம்**

**சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி**

**நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி**

**சித்திரமும் வடிவமைப்பிலும் சிறப்பு நுண்கலைமாணி கற்கைநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்புப் பரீட்சை**

**கல்வியாண்டு 2022/2023**

**மொழிமூலம் : தமிழ்**

மேற்படி நான்கு வருட பட்டப் படிப்புக் கற்கைநெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் 2022/2023 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமையைப் பெற்றுக் கொண்டுள்ள தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 07.09.2023 தொடக்கம் 19.09.2023 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**அனுமதிக்கான தகைமைகள்**

கர்நாடகசங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்ய விரும்பும் பாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது கர்நாடகசங்கீதம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C), மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரணதரச் சித்தியும் (S) பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**மதிப்பீடு செய்யும் முறை**

கர்நாடகசங்கீதம் / நடனம் (பரதம்) - ஆற்றுகைப் பரீட்சை
சித்திரமும் வடிவமைப்பும் - செய்முறை மற்றும் எழுத்துப் பரீட்சை

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

விண்ணப்பதாரிகள் **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளம் ஊடாக தத்தமது விண்ணப்பங்களை நிகழ்நிலையாக (online) 19.09.2023 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கப்பட வேண்டும். பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ/த) 2022 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத்துக் கொள்ளுதல் அவசியமானது.
விண்ணப்பித்த பிரதிகளை பதிவிறக்கம் செய்து அதில் கையெழுத்திட்டு க.பொ.த உயர்தர பெறுபேற்று பத்திரப் பிரதி மற்றும் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினையும் விண்ணப்பத்துடன் இணைத்து உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இராமநாதன்வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சங்கீதம்/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும் 2022/2023" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 21.09.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.
தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அவர்களினால் வழங்கப்பட்ட மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும். பரீட்சை தொடர்பான அனைத்துத் தகவல்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் அறிவிக்கப்படும்.

**பணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்தி இருத்தல் வேண்டும்.

| கட்டணம் மற்றும் வங்கிக் கணக்கிலக்க விபரம் | | | |
|---|---|---|---|
| இல | கற்கைநெறி | மக்கள் வங்கிக் கணக்கிலக்கம் | விண்ணப்பக் கட்டணம் |
| 1 | கர்நாடக சங்கீதம் | 040002400001622 | 1000.00 |
| 2 | நடனம்- பரதம் | 040002400001630 | 1000.00 |
| 3 | சித்திரமும் வடிவமைப்பும் | 040002400001648 | 2600.00 |

மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பதாரிகள் தங்கள் பாடங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச்சீட்டில் குறிப்பிடவும். இக்கட்டணத்தினை இணையவழி மூலம் மேற்குறிப்பிட்ட கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்ய முடியாது.
அனுமதிக்குரிய ஆகக்குறைந்த தகைமையைக் கொண்டிராதவையும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாதவையும், க.பொ.த (உயர்தரம்) பெறுபேற்று பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாதவையும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப் பெறாதவையுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி எண் 021 222 6714 அல்லது மின்னஞ்சல் முகவரி: admissions@univ.jfn.ac.lk மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

**பதிவாளர்** (C-7201) **07.09.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 276





'இவள் அவ்வளவு பித்துக் குளிப் பெண் அல்ல' என்று வந்தியத்தேவன் எண்ணிக் கொண்டான். கொஞ்சம் அவனுக்கு நம்பிக்கை பிறந்தது.

"நானே என் கண்ணால் பார்த்தேன். சக்கரவர்த்தி படுத்த படுக்கையாய்க் கிடக்கிறார். இரண்டு கால்களிலும் உணர்ச்சியே கிடையாது. ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாது. அவரைக் குணப்படுத்த மூலிகை கொண்டு வரத்தானே நான் வந்திருக்கிறேன். பெண்ணே! எனக்கு நீ ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டான்.

அதற்கு மறுமொழி சொல்லாமல், "சக்கரவர்த்தி அதிக நாள் உயிரோடிருக்க மாட்டார், சீக்கிரத்தில் இறந்து போய் விடுவார் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?" என்று கேட்டாள் பூங்குழலி.

"நீ இச்சமயம் உதவி செய்யாவிட்டால் அப்படி நடந்தாலும் நடந்துவிடும். இலங்கையில் ஓர் அபூர்வ சஞ்சீவி மூலிகை இருக்கிறதாம். அதைக் கொண்டு வந்தால் சக்கரவர்த்தி பிழைத்துக் கொள்வாராம். நீ படகு தள்ளிக் கொண்டு இலங்கைக்கு வருவாயா?"

"சக்கரவர்த்தி ஒருவேளை இறந்து போனால் அடுத்தபடி யார் பட்டத்துக்கு வருவார்கள்?" என்று பூங்குழலி கேட்டது வந்தியத்தேவனைத் தூக்கி வாரிப் போட்டது.

"பெண்ணே! எனக்கும், உனக்கும் அதைப்பற்றி என்ன? யார் பட்டத்துக்கு வந்தால் நமக்கு என்ன கவலை?"

"ஏன் கவலை இல்லை? நீயும் நானும் இந்த ராஜ்யத்தின் பிரஜைகள் அல்லவா?"

'இந்தப் பெண் பித்துப் பிடித்தவளே அல்ல. இவளிடம் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்ள வேண்டும். இவளுடைய விசித்திரமான செயல்களுக்கு வேறு காரணம் இருக்க வேண்டும்.'

"ஏன் பேசாமலிருக்கிறாய்? அடுத்த பட்டத்துக்கு யார் வருவார்கள்?" என்று பூங்குழலி மீண்டும் கேட்டாள்.

"ஆதித்த கரிகாலருக்குத்தான் யுவராஜா பட்டம் கட்டியிருக்கிறது. அவர்தான் நியாயமாக அடுத்த பட்டத்துக்கு வர வேண்டும்."

"மதுராந்தகர், அவருக்கு உரிமை ஒன்றுமில்லையா?"

"அவர்தான் இராஜ்யம் வேண்டாம் என்று சொல்லி விட்டாரே?"

"முன்னே அப்படிச் சொன்னார் இப்போது ராஜ்யம் வேண்டும் என்று சொல்கிறாராமே?"

"அவர் சொன்னால் போதுமா? பிரஜைகள் எல்லாரும் ஒப்புக் கொள்ள வேண்டாமா?"

"பெரிய மனிதர்கள் பலர் அவர் கட்சியில் இருக்கிறார்களாமே?"

"அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன். இவ்வளவும் உன் காதுவரையில் வந்து எட்டியிருப்பதை நினைத்தால் எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது."

"சுந்தரசோழர் திடீரென்று இறந்துபோனால் என்ன ஆகும்?"

"தேசமெல்லாம் பெருங் குழப்பம் ஆகிவிடும். அதைத் தடுப்பதற்குத்தான் உன் உதவி இப்போது தேவையாயிருக்கிறது."

"நான் என்ன உதவியைச் செய்ய முடியும்?"

"முன்னமேயே சொன்னேனே. நான் அவசரமாக மூலிகை கொண்டு வர இலங்கைத் தீவுக்குப் போக வேண்டும். அதற்கு நீ படகு வலித்துக் கொண்டு வரவேண்டும்."

"என்னை எதற்காக அழைக்கிறாய்? ஒரு பெண் பிள்ளையைப் படகு தள்ளும்படி கேட்க வெட்கமாயில்லையா?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தேடிய பொருள் கிடைத்ததா?



யாருமே இல்லாமல் அந்த மாளிகையில் அனைத்தும் தன்னிச்சையாக இயங்கி கொண்டிருந்தன. உள்ளே வந்த அவளுக்கு ஒரு குவளையில் பழரசம் பறந்து வந்து அவள் முன் நின்றது. அவளும் சிரித்து கொண்டே என்ன அதிசயம் என் அதை எடுத்து பருகினாள். மிக பிரமாண்ட மாளிகையில் எப்படி யாருமே இல்லாமல் இருக்கிறார்கள் என யோசித்து கொண்டே உள்ளே சென்றாள்.

அவள் அமருவதற்கு நாற்காலி அவள் முன்னே வந்து நின்றது. அந்த நாற்காலியில் அமர்ந்த அவளுக்கு ஏதோ ஒரு குரல் கேட்டது. ஒருவேளை இந்த மாளிகையின் உரிமையாளரா இருக்குமோ என அந்த குரலை உற்று கவனித்தாள். அது ஒரு பெண்ணின் குரல், இங்கிருந்து தப்பித்து ஓடி விடு என ஒரு குரல், லிண்டாவிற்கு அதிர்ச்சி. இத்தனை அழகான மாளிகையை விட்டு தப்பித்து ஓட சொல்கிறார்களே யாராக இருக்கும் என அவள் சுற்றி பார்க்கிறாள்.

எல்லா திசையும் நோட்டமிட அவளால் எந்த திசையில் குரல் கேட்டது என கண்டு பிடிக்க முடியவில்லை. லிண்டாவிற்கு சிறிதாக பயம் எட்டி பார்க்கிறது. மீண்டும் அந்த குரல் அவன் வருவதற்குள் ஓடி விடு என இன்னும் அருகில் கேட்டது. இப்போதுதான் புரிந்தது அது நாற்காலியில் இருந்து வருகிறது. அவள் விழுந்து அடித்து அதில் இருந்து எழுந்தாள்.

நாற்காலி மீண்டும் அதன் இடத்திற்கே சென்றது. அப்போதுதான் புரிந்தது லிண்டாவிற்கு அங்கு இருக்கும் அனைத்துமே அசையும் பொருட்கள். அவள் தப்பித்தோம் பிழைத்தோம் என ஓட ஆரம்பித்தாள். அப்போதுதான் அந்த மந்திரவாதி வருவதை உணர முடிந்தது அவளால். எப்படி தப்பிப்பது என யோசித்தாள் லிண்டா. எந்த யோசனையும் கை கொடுக்கவில்லை. பயம் உச்சந்தலையில் அவளுக்கு ஏறியது. நானும் இதுபோல் ஆகிவிட்டால் என்ன செய்வது என குழப்பம் வேறு, நிதானமாக இரு லிண்டா என தனக்கு தானே பலமுறை கூறினாள்.

மந்திரவாதி வீட்டிற்குள் புதிதாக யாரோ இருப்பதாய் உணர்ந்தான். கொஞ்சம் அமைதி ஆனா லிண்டாவிற்கு ஒரு யோசனை தோன்றியது, நமது கிராமத்தில் மந்திரவாதிகள் இருந்தார்கள். அப்படியெனில் கண்டிப்பாக தேவதை யாரேனும் இருக்க வாய்ப்பிருக்கு என எண்ணி அவள் மனதிற்குள் அழைக்க ஆரம்பித்தாள் தேவதையே எங்கிருந்தாலும் உடனடியாக எனக்கு உதவுங்கள். என்னைப்போல் இங்கு பலரும் மாட்டி கொண்டுள்ளார்கள். அவர்களையும் விடுவிக்க வேண்டும் என லிண்டாவின் உதவும் குணத்தையும் மறக்காமல் வேண்டினாள். திடீரென ஒரு குரல் லிண்டாவில் காதுகளில் ஒலித்தது. அனைவரையும் விடுவிக்க வேண்டுமென்றால் நீ மந்திரவாதியை சந்திக்க வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும்.

– பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொடிய விலங்குகள் ஆட்சியில் அமர்ந்தால்...

2019இல் நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யாவர்? அதன் பின்னணி என்ன? என்ற விடயங்களை சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொலியில் இருந்து உலகம் அறிந்து கொண்டது.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக தேவாலயங்கள் மீதும் நட்சத்திர விடுதிகள் மீதும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தி, மக்களைக் கொன்ற கொடுமையை நினைக்கும்போது இதயம் பதறுகிறது.

சில திரைப்படங்களில் வருகின்ற கொடூரச் சம்பவங்களை மிஞ்சியதாக இந்தப் படுபாதகச் செயல் அமைந்துள்ளது.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக குண்டு வைத்து அப்பாவி பொதுமக்களைக் கொன்று நாட்டில் சட்டம், ஒழுங்கு குலைந்துள்ளதாகக் காட்டி ஆட்சியைக் கைப்பற்ற நினைத்த அந்தக் கொடியவர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்களை எவ்வாறு வதைத்திருப்பார்கள் என்பதை இப்போதாவது சிங்கள மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆம், அன்புக்குரிய சிங்கள மக்களே! நீங்கள் ஆட்சியில் அமர்த்தியவர்கள் பௌத்தர்களா? அவர்கள் மனிதர்களா? என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

விகாரைகள் அமைத்தீர்கள். துறவிகளை கொண்டு பௌத்த பீடங்களை உருவாக்கினீர்கள். பிரித் ஓதினீர்கள். பௌத்தம் கொல்லாமை எனும் அறத்தை போதிப்பதாகப் போதனை செய்தீர்கள். ஆனால் நடந்தது என்ன என்பதைப் பார்த்தீர்களா?

ஈஸ்டர் திருநாளில் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என அனைவரும் ஒன்று கூடிப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவேளை, தற்கொலைக் குண்டுதாரிகளை அனுப்பி தேவாலயங்கள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தி, மனித உயிர்களைக் காவு கொண்டார்களே! அவர்களா இந்த நாட்டின் தலைவர்கள். அந்தோ! கொடுமை.

ஒரு தேவாலயத்தில் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த தன் தாய்க்குப் பக்கத்தில் நின்று ஒரு குழந்தை அழுத அந்த சம்பவம் கூட இந்த விலங்குகளின் மனங்களை உருக்கவில்லை.

என்ன செய்வது நீதி மறுக்கப்பட்ட நாடு இது என்பதால், கொலைக் குற்றவாளிகளுக்கு எந்தத் தண்டனையும் கிடைக்கப் போவதில்லை என்பது சர்வநிச்சயம்.

ஆனாலும் ஒன்று. ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணி பற்றி சனல் 4 தொலைக்காட்சி தகவல் வெளியிடுவதற்கு முன்னதாகவே சிங்கள மக்கள் உண்மையை அறிந்தனர்.

அதன் காரணமாக அவர்கள் கொடியவர்களின் ஆட்சியைத் துரத்த பேரெழுச்சி கொண்டெழுந்தனர்.

மக்களின் எழுச்சி கண்டு நடுங்கியவர்கள் பின் கதவால் தப்பி ஓடினர்.

எனினும் கொடியவர்களின் ஆசியுடன் ஆட்சி ஏறியவர்கள் ஒருபோதும் அவர்களைத் தண்டிக்கப் போவதில்லை.

ஆகையால் இவர்களுக்கான தண்டனையை சர்வதேசம் வழங்க வேண்டும்.

அதேசமயம் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கக்கூடிய துணிவுடைய ஜனாதிபதியை சிங்கள மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

இல்லையேல் இந்த நாட்டில் மீண்டும் மீண்டும் கொடியவர்கள் பிறந்து கொண்டே இருப்பார்கள்.

## முன்னறிவிப்பின்றி வெளியேறும் மருத்துவர்கள் தொடர்பில் கடுமையான தீர்மானம்

(கொழும்பு)

நாட்டிலிருந்து முன்னறிவிப்பு இன்றி வெளியேறும் வைத்தியர்கள் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் கடுமையான தீர்மானம் எடுக்கப்படுமென பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய அடிப்படை வைத்தியசாலையின் மயக்க மருந்து நிபுணர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பணிக்கு சமுகமளிக்காத காரணத்தினால் வைத்தியசாலையில் பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி. விஜேசூரிய இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். (நி-5)

## மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்க தீர்மானம்

(கொழும்பு)

மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட 11,000 இற்கும் அதிகமான முறைப்பாடுகளை உடனடியாக விசாரிப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலக மட்டத்தில் முறைப்பாடுகள் விசாரணைக்குட்படுத்தப்படும் என ஆணையாளர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ள முறைப்பாடுகளில் சில வற்றை வேறு நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதற்கமைய, சம்பந்தப்பட்ட முறைப்பாடுகள் பொதுச்சேவை ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, தொழில் திணைக்களம், நுகர்வோர் விவகார அதிகார சபை ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அந்த முறைப்பாடுகள் உரிய நிறுவனங்களால் சரியான முறையில் விசாரணை செய்யப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிடைத்துள்ள அனைத்து முறைப்பாடுகளையும் உடனடியாக விசாரணை செய்வதன் மூலம் மக்களுக்கான நீதியை நிலைநாட்ட முடியும் என சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா மேலும் தெரிவித்தார். (நி-5)

## தொடர்ந்து வீழ்ச்சியடையும் இலங்கை ரூபா

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நேற்றைய நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 327.51 ரூபாவாகவும் கொள்வனவு விலை 315.93 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 241.62 ரூபாவாகவும் கொள்வனவு விலை 229.89 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-5)

## கடல் சங்குகள் மீட்பு

(புத்தளம்)

கற்பிட்டியில் இருந்து சட்டவிரோதமாக மன்னாருக்கு அனுப்புவதற்கு தயாராக வைத்திருந்த கடல் சங்குகள் பொலிஸாரினால் கடந்த திங்கட்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

கற்பிட்டியில் இருந்து பயணிக்கும் இ.போ.ச பயணிகள் பேருந்தின் ஊடாக மன்னாருக்கு கொண்டு செல்வதற்கு தயார்படுத்தப்பட்டிருந்த 2100 கடல் சங்குகள் கைப்பற்றியுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். கற்பிட்டி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் பயணத்தை தொடங்கும் முன் கற்பிட்டி நகரில் பேருந்தை சோதனையிட்ட பொலிஸார் பேருந்தின் பின்புற டிக்கியில் 7 உரைப் பைகளில் இருந்து 2100 கடல் சங்குகள் மீட்கப்பட்டுள்ளன.

எனினும் குறித்த கடல் சங்குகளை பேருந்தில் ஏற்றிச் சென்றது யார் என இதுவரை தெரியவில்லை எனவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

## சில பொருட்களுக்கு வரி விலக்கு

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

விசேட தேவையுடையவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களுக்கும் உள்நாட்டு அரிசி உற்பத்திக்கும் சமூகப்பாதுகாப்பு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், விசேட தேவையுடையவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களுக்கு சமூக பாதுகாப்பு வரியில் இருந்து விலக்களிக்கப்படவுள்ளது. அத்துடன் உள் நாட்டு அரிசி உற்பத்திக்கும் சமூகப் பாதுகாப்பு வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

## வைத்தியசாலைகளுக்கு செல்ல அச்சப்படும் மக்கள்

### சபையில் சஜித் தரப்பு ஆதங்கம்

(கொழும்பு)

இன்று நாட்டு மக்கள் வைத்தியசாலைக்கு செல்வதற்கும் மருந்துகளை உட்கொள்ளவும் மயக்க மருந்துகளை பெற்றுக் கொள்ளவும் அச்சமடைகின்ற நிலையில் இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான கயந்த கருணாதிலக பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மோசடி முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட மருந்துகளால், குழந்தைகள், இளைஞர்கள், முதியவர்கள் என வயது பேதமின்றி பல உயிர் இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்டம், இலங்கையின் சுகாதார நிலைமை தொடர்பில் பாரிய அச்சுறுத்தலை வெளியிட்டுள்ளதோடு இலங்கையின் சனத்தொகையில் 60 லட்சம் மக்கள் உணவு பாதுகாப்பின்மையை எதிர்நோக்குவதாகவும் அத்தோடு இலங்கையின் சனத்தொகையில் 50 லட்சத்திற்கும் அதிக மானவர்கள் தங்களின் 3 வேளை உணவினை 1 வேளையாக மட்டுப்படுத்தியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்டம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணி தாய்மார்கள் என்போர் உணவு போஷாக்கின்மையால் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் சிறுவர்களுக்கான போஷாக்கின்மை வீதமானது இந்த ஆண்டு செப்டெம்பர் வரையில் 50 சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் நோய்களை கண்டறியும் இயந்திரங்கள் தரமற்றதாக காணப்படும் நிலைமை உள்ளதாகவும் மருத்துவமனையில் நிலவும் தரமற்ற மருந்து பாவனையால் அதிகமான விலைகளை செலுத்தி மருந்துகளை கொள்வனவு செய்ய தற்போது மக்கள் பழகி விட்டதாகவும் சமல் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு



26

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

தற்போது நிதியத்தின் உறுப்பினர்களுக்கான கட்டாய குறைந்தபட்ச பங்களிப்பு வீதம் அவர்களின் வேலைவாய்ப்பின் மொத்த மாத வருமானத்தின் 20 சதவீதமாகும். தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்கள் (உறுப்பினர்கள்) ஊ.சே.நிதியத்திற்கு முறையே குறைந்தபட்சம் உறுப்பினரின் மாதாந்த மொத்த வருமானத்தில் 12 சதவீதம் மற்றும் 8 சதவீதம் பங்களிப்பு செய்ய வேண்டும்.

உறுப்பினர்களினுடைய ஊ.சே.நி கணக்கில் திரண்ட மீதியாக அவர்களுடைய வேலை சூழலில் முதிர்ச்சியடைந்த நிலையில் வளர்ந்து வருகின்ற ஊ.சே.நிதியத்தின் நிலுவையானது, இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்டு திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள், பங்குகள் மற்றும் தொகுதிக் கடன் பத்திரங்கள் என்பவற்றில் முதலீடு செய்யப்படுகின்றன. வருமான வீதத்தைப் பொறுத்து வருடாந்த வட்டி வீதமானது தீர்மானிக்கப்பட்டு, ஊழியரின் கணக்கில் வைப்பிலிடப்படுகின்றது.

ஊ.சே.நிதிய உறுப்பினர்கள், பெண்களிற்கு 50 வயதும் ஆண்களிற்கு 55 வயதும் என்ற ஓய்வூதிய வயதினை அடையும் போது அவர்களின் ஓய்வூதிய சலுகைகளை (பங்களிப்புகள் மற்றும் திரட்டப்பட்ட வட்டி) கோர தகுதியுடையவர்களாவர். மேலும், உறுப்பினர்கள், குடிப்பெயர்வு, நிரந்தர அங்கவீனம், திருமணம் காரணமாக வேலைவாய்ப்பை விட்டு வெளியேறுதல் (பெண் உறுப்பினர்களுக்கு மட்டும்) மற்றும் ஓய்வூதியம் பெறக்கூடிய வேலைவாய்ப்பில் சேருதல் போன்ற நிகழ்வுகளில் தங்கள் ஊ.சே.நிதிய கணக்குகளிலிருந்து நிதியை மீளப்பெற உரித்துடையவர்கள். மேலும், ஒரு உறுப்பினரின் மரணத்தின் போது இறந்த உறுப்பினரின் சட்டபூர்வ வாரிசுகள் சலுகைகளைப் பெற தகுதியுடையவர்களாவர்.

**ஊழியர் நம்பிக்கை நிதியம் பற்றி.....**

ஊழியர் நம்பிக்கை நிதியம் என்ற பெயர் பெரும்பாலான இலங்கையருக்கு மிகவும் பரீட்சையமானது. ஆனால் அதில் உள்ள நன்மைகள், அதன் பயன்பாடு தொடர்பில் பெரும்பாலானவர்கள் அறிந்து வைத்திருப்பார்களா என்பது கேள்விக்குரியது.

ஓய்வூதிய நிதியத்திற்கு உரிமைகோரும் அரசாங்க மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்களைத் தவிர ஏனைய சகல ஊழியர்களுக்கும் வழங்கப்படும் நிதியானது ஊழியர் நம்பிக்கை நிதியம் எனப்படுகிறது. 1981ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாந் திகதி இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. இது ஊழியர் சேமலாப நிதியம் போன்று நேரடியாக தொழில் திணைக்களத்துடன் தொடர்புபடாத நிதியமாகும். ஊழியர் நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் இயங்கும் இந்நிதியமானது அரசாங்கம், ஊழியர் மற்றும் தொழில்தருநர் ஆகிய மூன்று தரப்பினராலும் உருவாக்கப்பட்ட நியதி சட்டரீதியான ஒரு சபையின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. தொழில் தருநர் மட்டுமே பங்களிப்பு செய்யும் இந்நிதியத்தில் ஊழியர் ஒருவரின் மாதாந்த சம்பளத்தின் 3 வீதம் தொழில்தருநரினால் குறித்த நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

ஊழியர் நம்பிக்கை நிதியம் எவ்வகை ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது சகல விதமான வர்த்தக வலயங்கள், கைத்தொழில் நகரங்கள், கைத்தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தனியார் துறையில் நிரந்தரமாக, ஒப்பந்த அடிப்படையில், தற்காலிக பணியாளர்கள், துண்டுச் சம்பள முறைமை, பயிலுநர்கள் மற்றும் தகுதிகாண் நிலையில் உள்ளவர்கள் என எந்நிலையில் பணியாற்றும் ஊழியர்களும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரித்துடையவர் ஆவர்.

ஊழியர் நம்பிக்கை நிதியமானது பணிப்பெண்கள், பத்திற்கும் குறைந்த எண்ணிக்கையான ஊழியர் உள்ள நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், சமய மற்றும் புண்ணிய ஸ்தலங்களில் பணியாற்றுபவர்கள், வயது குறைந்த குற்றவாளிகள், பெற்றோர் பாதுகாவலர் அல்லாதோர், விசேட தேவையுடையவர்களை பயிற்றுவிக்கும் நிறுவனத்தை சேர்ந்தவர்கள், அல்லது அவற்றை முதன்மைப்படுத்தும் தொழிலில் ஈடுபடுபவர்கள், குடும்ப அங்கத்தவர்களை கொண்டு நிர்வகிக்கும் நிறுவனங்களில் உள்ளோர் இந்நிதியத்தை பெறுவதற்கான வாய்ப்பை இழக்கின்றனர்.

60 வயது பூர்த்தியாகும் போது குறித்த நிதியம் பெற்றுக்கொள்ள முடியும் நாட்டிற்கு திரும்பி வரும் நோக்கமின்றி வெளிநாடு செல்வதாயின் அப்பணத்தை பெற முடியும். எதிர்பாராத வகையில் நிரந்த அங்கவீனத்திற்குள்ளாக வேண்டியிருப்பின் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதியம் பெறக்கூடிய அரச சேவையில் இணையும் வாய்ப்பு கிடைத்தால் பணத்தை பெற முடியும். தொழிலில் இருந்த ஓய்வு பெற்றால் அல்லது விலகினால் நிலுவையை மீளப்பெறலாம். ஆனால் ஒரு நிறுவனத்திலிருந்து விலகி நிதியை பெற்று வேறொரு நிறுவனத்தில் இணைந்தால் 5 வருடத்தின் பின்னரே மீண்டும் பெற முடியும். நிதியத்திற்கு சொந்தக்காரர் எதிர்பாராத வகையில் இறப்பாராயின் குறித்த நிதியானது ஏற்கனவே அவரின் பெயரின் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ளவருக்கு சொந்தமாகும்.

**நிதியங்களுக்கு அரசாங்கத்தால் உத்தரவாத வட்டி - இலங்கை வங்கி சங்கம்.**

இழக்கப்படும் நிலையில் இருந்த எமது நாட்டு உழைக்கும் மக்களின் நிதியங்கள்.உள்ளூர் கடன் மறுசீரமைப்பின் மூலம் பாதுகாக்கப்படும் என இலங்கை வங்கிச் சங்கத்தின் உறுப்பினர், இலங்கை வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரசல் பொன்சேக்கா தெரிவித்தார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படாவிட்டால் ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி உள்ளிட்ட நிதியங்களில் உள்ள பணம் ஊழியர்களுக்கு கிடைக்காமல் போகும் அபாயம் இருந்தது என்றும், ஆனால் கடன் மறுசீரமைப்பின் மூலம் இந்தப் பணம் பாதுகாக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் தயாரிக்கப்படும் '101' நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போதே, இலங்கை வங்கி சங்கத்தின் உறுப்பினரான இலங்கை வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரசல் பொன்சேக்கா இதனைத் தெரிவித்தார்.

**மேலும் கருத்து தெரிவித்த ரசல் பொன்சேக்கா,**

"உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கான தேவை இன்று நேற்று எழுந்ததல்ல. இலங்கையின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறைகளுக்கு இடையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. சுதந்திரத்திற்குப் பின்னர் சில வருடங்கள் தவிர, இறக்குமதிக்காக நாம் செலவழித்த டொலர்களுக்கும், ஏற்றுமதியின் ஊடாகக் கிடைக்கும் டொலருக்குமிடையில் பாரிய வித்தியாசம் காணப்பட்டது. அண்மைக்காலத்தில் வருடத்திற்கு இறக்குமதிக்கு இருபது பில்லியன் டொலர்கள் தேவை. ஆனால், ஏற்றுமதி மூலம் நமக்கு 12 பில்லியன் டொலர்கள் மட்டுமே கிடைக்கிறது. பற்றாக்குறையை ஈடுகட்ட, அன்றிருந்த அரசுகள் கடன் வாங்கின. தொடர்ந்து கடன் வாங்கியதாலும், அந்த ஆண்டின் வர்த்தக நிலுவையை விட முந்தைய கடனுக்கான வட்டியை செலுத்த வேண்டியதாலும், நாடு பெரும் நெருக்கடியில் சிக்கியது. அதனுடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவும் கடனுதவி எடுக்க வேண்டியிருந்தது.

இலங்கையால் தாங்க முடியாத அளவுக்கு கடன் வாங்க வேண்டியிருந்தது. 2022 ஏப்ரல் மாதமாகும் போது நாடு அதன் விளைவை உணரத் தொடங்கியது. இதனால் கடனை செலுத்த முடியாத நிலையில் இலங்கை இருப்பதாக மத்திய வங்கி ஆளுநரால் அறிவிக்க நேரிட்டது. தேவையான டொலரை எங்களால் ஈட்ட முடியவில்லை. வெளிநாடுகள் எங்களுக்கு கடன் தரவில்லை. இறுதியாக, கடன் நெருக்கடி நாட்டின் பொருளாதாரத்தை பெரிய அளவில் பாதித்தது.

நாட்டிலுள்ள வர்த்தக உரிமையாளர்கள் மற்றும் தொழிலதிபர்களுக்கு நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சிலர் தொழில்களை இழந்தனர். நாளடைவில் இது ஒரு சமூகப் பிரச்சினையாக மாறியது. அதன் பின்னரே, மக்கள் வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கினர். இறுதியாக, அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து சில நிவாரணங்களைப் பெற வேண்டியிருந்தது.

கடனை மீளச்செலுத்துவதற்கு எங்களுக்கு வருமானம் கிடையாது. கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கும் முன், நாம் சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அந்தத் திட்டத்தை தயாரிக்கும் செயற்பாடே உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பதில் நடக்கிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களாக மொத்தமாக 84 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இதற்கான போதுமான பொருளாதாரம் இலங்கைக்கு கிடையாது. அந்த கடனுக்கான வட்டி ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அந்த நேரத்தில்தான் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

இந்த 84 பில்லியன் டொலர் கடனை மீளச் செலுத்த நாங்கள் சில ஏற்பாடுகளை செய்ய வேண்டியிருந்தது. வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதில், வெளிநாட்டுக் கடன்களை வழங்கிய நாடுகளுடன் உடன்பாடு எட்டப்பட வேண்டும். உடன்பாடு ஏற்பட்டவுடன் கடனை தள்ளுபடி செய்யலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனல் 4...

பில் உடனடி விசாரணை அவசியம் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று வலியுறுத்தியுள்ளார்.

தாக்குதல்கள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் ஆணைக்குழு அறிக்கைகள், இதுவரை சரியாக ஆராயப்படாத உண்மைகள் தொடர்பாக பக்கசார்பற்ற, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய பரந்த விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-7,9)

## கட்டாயம்...

யர்களும் பார்க்கவேண்டும் என படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா விக்கிரமதுங்க தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மைகளை அம்பலப்படுத்தும் சனல் 4 இன் வீடியோவை பார்த்த பின்னர் ஏற்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்த வார்த்தைகள் இல்லை.

பல வருடங்களாக இந்த தாக்குதலிற்கும் கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் தொடர்பிருக்க வேண்டும் என நான் நினைத்தேன்.

இது அனைத்து இலங்கையர்களும் பார்க்கவேண்டிய மிக முக்கியமான காணொலியாகும்" என அவர் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## ராஜபக்ஷவினர்...

லாற்றுப் பகை இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட காணொலிகளில் நம்பகத்தன்மை இருக்குமானால் அதை எதற்காக அவர்கள் தமது இணையத்தளத்திலிருந்து நீக்க வேண்டுமென அவர் நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

பயங்கரவாதத்தை ஒழித்ததற்காக ராஜபக்ஷக்களைப் பழி வாங்குவதற்கான இன்னுமொரு முயற்சியாக இது இருக்கலாம். அல்லது சிலரின் அரசியல் நோக்கங்களைத் திருப்திப்படுத்துவதற்காக சனல் 4 புதிய வீடியோவை வெளியிட்டு இருக்கலாம்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின் எனது குடும்பத்துடனும் எனது தந்தை மற்றும் ராஜபக்ஷ என்ற பெயருடனும் சனல் 4 வரலாற்றுப் பகையைக் கொண்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படக் கூடாது, அது அரசியல் மயமாக்கப்படுவது சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்குத் தடையாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,9)

## ஈஸ்டர்...

காணொலியில் தெரிவிக்கப்பட்ட நிலையில் இது நாடு முழுவதும் கடும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. (ம-7,9)

## சர்வதேச...

ரேர்க் (Volker Turk) இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச கொள்கைக்கு முரணானது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலமானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தின் 19-3 பிரிவு மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்தின் மீது தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிப்பதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் Volker Türk சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிமனித உரிமைகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை போன்றே இதுவும் அமைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வருடத்திற்கு முன்னர் இடம்பெற்ற பாரிய மக்கள் போராட்டங்களை கருத்தில் கொண்டு, வரலாற்று மாற்றத்தின் சவால்களை யதார்த்தமாக்குவதற்கு அர்ப்பணிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதனால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நீதி, நியாயம், உண்மை என்பன நிறைவேற்றப்படாமல் வேதனையுடன் வாழ்ந்து வருவதாக உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்று அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், அவ்வாறானதொரு பொறிமுறைக்காக உண்மையான பின்னணியை தயார் செய்ய வேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சர்வதேச ஆதரவுடன் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7,9)

## ஒட்டு...

ஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதில் முள்ளியவளையைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடைய இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

முல்லைத்தீவு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர் மற்றும் பின்னால் அமர்ந்து சென்றவர் ஆகியோர் ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,9,299)

## முல்லை...

நீதவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் முன்னிலையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

குறித்த பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக அகழ்வு பணிகள் நேற்று வரை பிற்போடப்பட்டன.

இந்நிலையில் தொல்பொருள் துறை சிரேஷ்ட பேராசிரியர் ராஜ்சோம தேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட தரப்பினரால் குறித்த அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அகழ்வுப் பணிகள் இன்றைய தினமும் தொடரும் என முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்றைய அகழ்வுப்பணிகள் இடம்பெற்றிருந்தபோது புலனாய்வாளர்களும் அகழ்வுப்பணிகளை புகைப்படம் எடுத்துச் சென்றனர். (ம-7,9,299)


நாகபூசணி அம்மன் அருளுடன்
அதிர்ஷ்டம் வெல்லப்பட்டுள்ளது
NLB 05.09.2023 இடம்பெற்ற மஹஜன சம்பத லொத்தர் மூலம் எமது பிரதான முகவர் S.கனகலிங்கம் மூலமாக இரண்டு ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசில்கள் வெல்லப்பட்டுள்ளன. அதே தினத்தில் இடம்பெற்ற தனநிதானய லொத்தர் சீட்டிழுப்பில் 2 லட்சம் ரூபாய் வெல்லப்பட்டுள்ளது. 28.08.2023 அன்று இடம்பெற்ற ஹந்தகன லொத்தர் சீட்டிழுப்பில் முதல் பரிசாக 10 லட்சம் ரூபாயும் S.கனகலிங்கம் ஊடாக யாழ்ப்பாணத்தில் வெல்லப்பட்டுள்ளது.
யாழில் கனகலிங்கம் திலகவதி முகவர்களிடம் லொத்தர் ரிக்கெட்டுக்களை அதிகம் பெற்று நீங்களும் வெற்றியாளராகுங்கள் (16970)



மெகா பவர்
திகதி 06/09/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1577
Y 02 09 34 49 63
17416

தன நிதானய
திகதி - 2023.09.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1259
Q 02 49 69 79 Q
47717

Lucky 7
திகதி 06.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0055
L7 இலக்கம் 0 3
மீனம் 2 5 7 3 0 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3471
சீட்டிழுப்பு திகதி 06.09.2023
E 06 28 36 49
E
23980

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.09.06
சீட்டிழுப்பு இலக்கம் 538
துலாம் 04 27 35 51 துலாம்

மஹஜன சம்பத
திகதி 2023/09/06
சீட்டிழுப்பு இலக்கம் 5229
C 5 6 9 2 0 3

Super Ball
சீட்டிழுப்பு வாரம் 2203 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.09.06 தினம் புதன்கிழமை
10 17 49 71 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,175,148.40
34719 293

சனிதா
திகதி 2023.09.06 வெற்றி வாரம் 4364 வர்ணம் வயலட்
12 16 58 67 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,573,424.00
68680 428

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3915 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.09.06 தினம் புதன்கிழமை
13 42 58 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,168,876/-
21874 393

கப்ருக
திகதி 06.09.2023 வெற்றி வாரம் 1379
P 31 05 42 47 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 436,664,334.20
70396 746
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

ஜயோதா
திகதி 2023.09.06 வெற்றி வாரம் 1954 வர்ணம் மஞ்சள்
30 44 55 59 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.45,842,439.20
68324 757

அட கோடிபதி
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2029
சீட்டிழுப்பு திகதி: 2023.09.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,457,472/-
13 48 49 56 N
56955 164


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம். நெல்லியடி. பருத்தித்துறை. சாவகச்சேரி. கொடிகாமம். கிளிநொச்சி. மானிப்பாய். சுன்னாகம், அச்சுவேலி. சங்கானை வல்வெட்டித்துறை. உடுப்பிட்டி. முல்லைத்தீவு. வவுனியா. மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16913)

**076 825 7716** (ஆகாஸ்)



# New Science Hall
134, kannathiddy Road, Jaffna

## Intelligent PHYSICS
### R.Raakulan BSc

ஆரம்பம் : 11.09.2023 (திங்கள்)

புலங்கள், சடப்பொருட்களின் இயல்புகள், இலத்திரனியல், பரீட்சைகள்
**Mon - Fri :- 12.00pm - 2.00 pm**

சடமும் கதிர்ப்பும், அமைப்புக்கட்டுரை வினாக்களும் விளக்கங்களும்
**Sat, Sun :- 12.00pm - 2.00 pm**

வெப்ப பௌதிகவியலின் வினாக்களும் விடைகளும்
**Monday :- 3.00pm - 5.00 pm**

அலைகளும் அலைவுகளும், ஓட்ட மின்னியல்
**Fri, Sat, Sun :- 9.15pm - 10.45 pm(Zoom)**

கடந்தகால முழு வினாத்தாள்கள்
**Mon - Thu :- 9.15pm - 10.45 pm(Zoom)**

இறுதிப்பரீட்சைக்குள் முழுப் பாடப்பரப்பினதும் விரைவான மீட்டல் (C-7203)



## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7188)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 5392, 076 315 6470**



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கை நெறிகள்**
Banking Courses
DBF & HDBF (16/09/2023)
(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)

**கணக்காளர் கற்கை நெறிகள்**
Chartered Accounting Courses
Business Level I,II (16/09/2023)

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
aat (Sri Lanka)
(AA1 - 09.09.2023) G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
**(AA2, AA3 -09/09/2023)** (C-7202)

## Certificate Course in English

Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917



## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோவிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16957)

**077 728 6061**



## பணிநிலை வெற்றிடம்

யாழ்நகரில் இருந்து 5 Km
உட்பட்டிருக்கும் பணியாளர்
O/L or A/L படித்த பெண்
பணியாளர் தேவை.
வயது 18 - 30 வரை (16954)

**077 122 8841**



## WORK IN UK
### WORK PERMITS
### CONSTRUCTION WORKERS

- 5 YEAR WORK PERMITS
- 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிட உரிமை (Permanent Resident)
- ✓ BRICK LAYERS
- ✓ SHUTTERING CARPENTERS
- ✓ SHUTTERING JOINERS
- ✓ STEEL FIXERS
- ✓ ELECTRICIANS
- ✓ PLUMBERS
- ✓ STEEL ELECTORS FOR STRUCTURES



CIMS COLLEGE 0777-068-777 (C-7206)



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள் ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7206)

Srilankan Visa Extension




COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
**0777-068-777**


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 . 07 . 1966 | | 06 . 09 . 2023 |



## திருமதி தனரூபி கதிர்காமநாதன்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனரூபி கதிர்காமநாதன் அவர்கள் நேற்று 06.09.2023 புதன்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் துரையப்பா கதிர்காமநாதன் (VTK TRADERS உரிமையாளர், பிரபல இருசக்கர, நான்கு சக்கர உழவு இயந்திர வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும் பன்னாலையைச் சேர்ந்த ஏரம்பமூர்த்தி - கமலாதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற துரையப்பா மற்றும் சிவபாக்கியம் தம்பதிகளின் அருமை மருமகளும் குகவர்மன், துளசிகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தரூபி, வசந்தரூபி, சிவரூபி, சாந்தரூபி, லகீதரன், பகீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிதம்பரநாதன் - ஜெயராணி, காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் புஸ்பலீலா வாகீசன், புஸ்பமலர் செல்வக்குமார், இரவிச்சந்திரன், ஞானகுருவேல், செல்வநாதன், புவனேந்திரா, சோபனா, துசிதா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (07.09.2023) வியாழக்கிழமை பி.ப 4.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
கணவர் : 077 372 7502
குகவர்மன் : 077 066 6996
துளசிகன் : 076 803 5788

பன்னாலை,
தெல்லிப்பழை. (16963)


## வேலைவாய்ப்பு

உரும்பிராயில் இயங்கிவரும் Supermarket ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

**CASHIER - பெண்கள்**
கணனியில் Bill போடுவதற்கு பெண் பணியாளர் தேவை.
வயது எல்லை : 22 - 30
கல்வித் தகைமை : A/L 3 பாட சித்தி மற்றும் ஆங்கில, கணனி அறிவு

பொருத்தமானவர்கள் உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி வைக்கவும். (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

Email:-happysupermartlk@gmail.com
Whatsapp : 077 33 44 700 (16972)

(வேலை பழக விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்)



## கொழும்பு விலையில்...
### யாழ் நகரில் கோழிகள் விற்பனைக்கு உண்டு

புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் ஊர்க்கோழி, சேவல், விறாத்து குஞ்சுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. முட்டைகள் அனைத்தும்ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
(சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்)

- 1Kg புறோயிலரின் விலை - 1250/=
- 1Kg புறோயிலர் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி, 24 மணிநேர சேவை

**நியூ சிற்றி பாம்**
**நியூ சிற்றி கோழிக்கடை**
இல.8, சின்னக்கடை
மார்க்கெட் குருநகர், யாழ்ப்பாணம். (16965)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org